# NSW அகதியர் சுகாதாரத் திட்டம் 2022-2027

## இந்தத் 'திட்ட'த்தைப் பற்றிய கண்ணோட்டம்

**எதிர்கால நோக்கு:**
அகதியர் பின்புலத்தைச் சேர்ந்த மக்கள் NSW மாநிலத்தில் தழைத்தோங்கிவரும், ஆரோக்கியமானவர்களாவர்.



பின் வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்காக உள்ளூர்ப்-பகுதித் திட்டங்களை வழி நடத்தவும், அவற்றை உருவாக்கவும், அவற்றைப் பற்றிய புதிய விடயங்களைத் தெரிந்துகொள்ளவும் NSW Health இந்தத் 'திட்ட'த்தினைப் பயன்படுத்தும்.

- அகதிகளும் புகலிடம் நாடுவோரும் அவர்களுடைய சுகாதாரப் பராமரிப்பின் மையமாக இருப்பர், மற்றும் NSW Health- சேவையானது நோயாளர்கள் மற்றும் சமூகத்தினருடன் இணைந்து செயல்பட்டு அவர்களுக்கு ஆதரவுதவியாக இருக்கும்.
- மற்ற அரச முகமைகளுடனும் அரசு-சாரா அமைப்புகளுடனும் ஒத்துழைப்பாய்ப் பணியாற்றுவதன் மூலம் புதிதாய்த் தோன்றும் சுகாதாரப் பராமரிப்புத் தேவைகளுக்கான பதில் நடவடிக்கைகளை NSW Health மேற்கொள்கிறது.
- அகதிகள் பின்புலத்தைச் சேர்ந்தோரிடையே காணப்படும் சுகாதார ஏற்றத்தாழ்வுகளுக்குத் தீர்வு காண NSW Health முனைகிறது.
- சனங்களுக்கு இருக்கும் உடல் நலப் பிரச்சினைகளுக்கான அணுகுமுறைகள் மட்டுமில்லாமல், அவர்களுடைய குடும்பச் சூழல்கள், கலாசாரப் பின்புலம், ஆன்மீக நம்பிக்கைகள் ஆகியவற்றிற்கான பரந்த அணுகுமுறைகளை NSW Health பின்பற்றுகிறது.

| இலக்குகள் | NSW Health ஆற்றும் பணிகளாவன: |
|---|---|
| **கலாச்சார அடிப்படையிலான பதில் நடவடிக்கைகளையும், அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகளைப் பற்றியுமான புரிதல்களைக் கொண்ட சுகாதாரப் பராமரிப்பு சேவைகளைத் தக்க நேரத்தில் சனங்களால் அணுகிப் பெற இயல வேண்டும்.** | கலாச்சார அடிப்படையிலான பதில் நடவடிக்கைகளையும், அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகளைப் பற்றிய புரிதல்களையும் கொண்ட செயல்திறன் மிக்க, ஆதாரங்களின் அடிப்படையிலான மற்றும் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பிரதான சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வசதிக்கேற்ப மாற்றியமைத்து அவற்றை இலக்காகக் கொள்ளும். |
| | அகதியர் பின்புலங்களைச் சேர்ந்தவர்களுடன் இணைவாய்ப் பணியாற்றி, அவர்களுடைய சுகாதாரப் பராமரிப்புத் தேவைகளுக்கான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதை இலக்காய்க் கொள்ளப்பட்ட சிறப்புத்துவ சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை அளிக்கும். |
| | அகதியர் பின்புலங்களைச் சேர்ந்த பெரும்பான்மையானவர்களுக்குத் தேவைப்படும் பலாபலன்களை அளிப்பதற்காக, கலாச்சாரத்திற்கேற்ற பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நெகிழ்ச்சித் திறன் மிக்க சேவை அணியினரைப் பணியமர்த்தி அவர்களுக்குப் பயிற்சியளித்து ஆதரவுதவியளிக்கும். |
| **மக்களுக்கான பராமரிப்பில் முக்கியமான பங்கினை மக்களே மேற்கொள்வர்** | தமக்கான பராமரிப்பைப் பற்றிய முடிவுகளை மேற்கொள்வதில் நோயாளர்கள் மற்றும் சமூகத்தினருடன் பங்குபற்றிச் செயல்படுவது உள்ளடங்க, சுகாதார முறைமையினை விளங்கிக்கொண்டு அதனூடாகப் பயணிப்பதிலும், அவர்களுக்கான சுகாதாரப் பராமரிப்பில் சுறுசுறுப்பாய்ப் பங்குபற்றுவதிலும் மக்களுக்கு ஆதரவுதவியாக இருக்கும். |
| | சுகாதாரத்தைப் பற்றிய அறிவினையும், தகவல்களைப் பெறுவதற்கான வசதிகளையும் மேம்படுத்துவது உள்ளடங்க, தகுந்த நேரத்திலும், செயல்திறன் மிக்க முறையிலும் மொழிபெயர்ப்பு மற்றும் மொழிசார் சேவைகளை வழங்கும். |
| | சுகாதார சேவைகளை வடிவமைத்து, அவற்றை நடைமுறைபடுத்தி மதிப்பீடு செய்வதில் சேவை நுகர்வோருடன் பங்காண்மை கொள்ளும். |
| **புதிதாய்த் தோன்றும் சுகாதாரப் பராமரிப்புத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான பதில் நடவடிக்கைகளை ஒத்துழைப்பாகவும், வளைந்துகொடுக்கும் தன்மையுடனும் NSW Health மேற்கொள்கிறது** | குறிப்பாக, NSW மாநிலத்தின் கிராமிய மற்றும் பிராந்தியப் பகுதிகளில் அதிகரித்துவரும் மீள்குடியேற்றங்கள், இத் திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள புதிதாய் எழும் தேவைகள் மற்றும் முந்துரிமைகள் போன்ற சுகாதாரப் பராமரிப்புத் தேவைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கான பதில் நடவடிக்கைகளை வளைந்துகொடுக்கும் தன்மையுடன் மேற்கொள்ளும். |
| | தேவைப்படும் இடங்களில் சுகாதாரப் பராமரிப்பு சேவைகளுக்கான தேவைக்கு வளைந்துகொடுக்கும் தன்மையுடன் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் – சிக்கல் மிகுந்த நோய்நிலைகள் மற்றும் நீண்ட காத்திருப்புப் பட்டியலில் உள்ள சேவைகளை முந்துரிமைப்படுத்துதல் ஆகியன இதில் உள்ளடங்கும். |
| | அகதியர் பின்புலங்களைச் சேர்ந்த மக்களுக்கான சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்காக சுகாதாரம், சமூக சேவைகள், புலப்பெயர்வு ஆகியன மட்டுமின்றி, குடியமரல் சேவைகள், NGOs ('அரசு-சாரா அமைப்புகள்') PHNs ('ஆரம்ப சுகாதார வலைப்பின்னல்கள்') மற்றும் ஆரம்ப நிலைப் பராமரிப்பு சேவை வழங்குநர்கள் ஆகியோரை உள்ளடக்கும் பங்காளர்களுடன் ஒத்துழைப்பாய்த் தொடர்ந்து பணியாற்றும். |
| **முந்துரிமை அளிக்கப்படும் பிரச்சினைகள்** | சனங்கள் விரும்பும் மொழியில் செயல்திறன் மிக்கத் தொடர்பாடல்கள் |
| | பிரதான சுகாதார சேவைகளின் கலாச்சார அடிப்படையிலான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திறன் |
| | மனநலம் மற்றும் வாய்ச் சுகாதாரம், மற்றும் கிராமப் பகுதிகளிலும், பிராந்தியப் பகுதிகளிலும் மீள்குடியமர்த்தப்பட்டவர்களுக்கான சேவைகள் ஆகியன உள்ளடங்க, பொது சுகாதார சேவைகளைத் தக்க நேரத்தில் அணுகிப் பெறுவதற்கான வசதி |
| | திறமை மிக்க வகையில் சேவை வழங்குமுறையின் ஊடாகப் பயணித்தல் மற்றும் பராமரிப்பு ஒருங்கிணைப்பு |
| | சுகாதார முறைமையின் ஊடாய் வெற்றிகரமாய்ப் பயணித்து, அனுகூலமான உடல் நலத்தைப் பெற மக்களுக்கு உதவுவதை இலக்காகக் கொண்ட சுகாதார முன்னெடுப்பு மற்றும் சுகாதாரக் கல்வி |
| **முந்துரிமை அளிக்கப்படும் மக்கள்** | கிராமப் பகுதிகளிலும், பிராந்தியப் பகுதிகளிலும் வாழ்பவர்கள் |
| | இயலாமையுடன் வாழ்ந்துவருபவர்கள் |
| | புதிதாக வந்துசேர்ந்திருப்பவர்கள் |
| | சமூகத்தில் வாழ்ந்துகொண்டு புகலிடம் நாடிக்கொண்டிருப்பவர்கள் |
| | வயதில் மூத்தவர்கள், குறிப்பாக நலிவுற்றவர்கள் மற்றும் வயதானவர்கள் |
| | பெண்கள் மற்றும் ஒற்றைப் பெண்-பெற்றோர் உள்ள குடும்பங்கள் |
| | குழந்தைகள் மற்றும் இள வயதினர் – குறிப்பாக முதல் 2000 நாட்களில் |
| | ஆண்கள் |
| | பல விதப் பால்-பண்புகளையும், பாலின அடையாளங்களையும், பால்-கலப்பு மாறுபாடுகளையும் கொண்டவர்கள் LGBTQ+ |

© NSW Ministry of Health. December 2022.